**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.68/2022
Prosecution witness.3

| | |
|---|---|
| பெயர் : விஸ்வநாதன் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of February 2025.

17.02.2025

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்கிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் நினைவில் இல்லை, மாலை 04.00 மணியளவில் மகிண்டி விளக்கின் அருகில் உள்ள எனது வீட்டருகே நின்றுகொண்டிருந்த போது அ.சா.1 பாப்பா ரத்தகாயத்துடன் அங்கு வந்தார். நான் அ.சா.1 பாப்பாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என்னுடைய கையெழுத்தை நான் மருத்துவமனையில் வைத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அசா.ஆ.2).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி:** இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று யாரும் கட்டாயமோ, மிரட்டலோ, தூண்டுதலோ விடுத்தார்களா என்றால் இல்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில்

அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், மகேஸ்குமார் என்பவரும் இவ்வழக்கின் சம்பவ இடத்தில் நின்று கொண்டிருந்தபோது கீழத்துவல் காவல்நிலைய போலிசார் சம்பவம் நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து எழுதி அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் ஒரு கையெழுத்து செய்தேன். என்னுடன் சேர்ந்து எத்தனை பேர் கையெழுத்து செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் வரைந்த வரைபடத்தில்தான் கையெழுத்து செய்தேன் என்றால் இல்லை. போலிசார் எழுதிய தாளில் கையெழுத்து செய்தேன். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். நான் சொன்னத்தைத்தான் எழுதினார்கள். சம்பவம் நடந்த இடத்தில்தான் நான் கையெழுத்து செய்தேன். சம்பவம் நடந்த இடத்தை சுற்றி யார் யாருடைய இடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) சம்பவத்தில் அடிபட்ட அ.சா.1 தெரிந்த நபர் ஆவார். நான் கையெழுத்து போடும் போது என்னுடன் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் இரண்டு நபர்கள் இருந்தார்கள். போலிசார் எந்தெந்த ஆவணங்கள் தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.